*189 வின.—திரு. முனு. ஆதி: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சைதாப்பேட்டை தாலுகாவிற்கான, ஐம்பது படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவ மனையைத் தாம்பரத்தில் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, may I request the construction of a new Government Hospital at Tambaram with provision for 100 beds is under consideration of the Government.

திரு. முனு. ஆதி: மாவட்ட அபிவிருத்துக் கவுன்சில் கூட்டத்தில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகியும், 100 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி இன்னும் அங்கே அமைக்கப்படவில்லை. அந்த வட்டத்திற்கே மருத்துவமனை இல்லாத காரணத்தினால், அந்த வட்டத்தின் தலைநகரமான தாம்பரத்தில் இந்த மருத்துவமனையை ஏற்படுத்த அரசு உடனடியாக துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டதுபோல அரசினரின் ஆய்வில் இருக்கிறது. ஆய்வு முடிவடைந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. தீர்த்தகிரி: தர்மபுரி மாவட்டம் பிற்பட்ட மாவட்டமாக இருப்பதால், தாலுகா தலைநகரங்களான தர்மபுரி, ஹரூர், ஹோசூர், கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் தாலுகா ஆஸ்பத்திரிகளில் கட்டட வசதி இல்லை. இதர இடங்களில் கட்டட வசதி, படுக்கை வசதி இல்லாததினால் நோயாளிகள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சுகாதார வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்வி தாம்பரம் மருத்துவ மனையைப் பற்றியது. கனம் உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் விளக்கம் சொல்லலாம்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the state of emergency has stood in the way of the Government sanctioning additional accommodation for the hospital at Gudiyatham and whereas the paucity of funds has stood in the way of having an operation theatre in Gingee, what is the sanctity which the Government have got for Tambaram alone?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: No sanctity is attached to Tambaram alone. I have already stated that it is under the consideration of the Government and necessary steps would be taken after the consideration is over.

திரு. வி. கே. கோதண்டராமன்: பொதுவாக ஆஸ்பத்திரிகளில் போதுமான அளவுக்கு டாக்டர்கள், நர்சுகள், மற்ற ஸ்டாப்,

1967 ஜூலை 6]

மருந்துகள் இவைகள் மிகவும் குறைவு என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, இவைகளை அதிகரிப்பதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு நிலையை தகவல் மூலம் தெரியப்படுத்தினால், நடவடிக்கை எடுக்க சாத்தியமாக இருக்கும். பொதுவாகச் சொல்வதைவிட, குறிப்பாகச் சொல்வதே சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, தாம்பரம் மருத்துவ மனையின் மதிப்பீடுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதிப்பீட்டுத் தொகை ரூ. 12 லட்சம்.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, தாலூகா தலைநகர் ஆஸ்பத்திரிகளில் நல்ல தேர்ச்சி பெற்ற சர்ஜன், டாக்டர்கள் அமைக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி, தாம்பரம் மருத்துவ மனை பற்றியது.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether the proposal for the construction of a hospital at Tambaram was initiated by the previous Government or by this Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : My hon. Friend may have the pleasure of knowing that it was sponsored by the previous Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

சென்னை நகரில் தொடர்ந்து தீ விபத்துக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மாரிமுத்து, திரு. கோதண்டராமன், திரு. நல்லசிவன், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆகியோர் ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை நான் அனுமதிக்க வேண்டிய காரணங்களைத் தெரிவிக்குமாறு முதலில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.